14.ஐப்பசி.2021 பக்கங்கள் - 02




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 35

## நாடு கெப்டன் இல்லாத கப்பலாக நடுக்கடலில் மிதக்கிறது



புதிய மிதக்கும் வாக்காளர்களின் நம்பிக்கையை பெற்று. பதவிக்கு வந்த இந்த ஆட்சியாளர்கள் தமது முட்டாள்தனமான கொள்கைகளால். இந்நாட்டை இன்று கப்டன் இல்லாத கப்பலாக நடுக்கடலில் மிதக்க விட்டுவிட்டார்கள். இது இன்று தொழிற்படும் அரசாங்கம் இல்லாத. தலைவர் இல்லாத. வழிகாட்டி இல்லாத நாடாக போய்விட்டது. திக்கு தெரியாமல். திசை தெரியாமல் இந்நாடு இன்று அல்லாடுகிறது.

மக்கள் விலைவாசியால் விழி பிதுங்குகிறார்கள். இதற்கு இந்த அரசின் ஒரே பதில் உலகம் முழுக்க கொரோனா பரவி உள்ளது. அது எமது நாட்டினதும் பொருளாதாரத்தை அழித்துவிட்டது என்பதாக மாத்திரமே இருக்கிறது. ஆம். கொரோனா உலகம் முழுக்க இருக்கிறது. தெற்காசியாவில் இந்தியா. பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் இருக்கிறது. (02)

## மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆயரின் கவனத்திற்கு கொண்டு சென்ற சாணக்கியன்

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை அதி வண.ஜோசப் பொன்னையா ஆண்டகையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் சந்தித்து பேசியுள்ளார். ஆயர் இல்லத்தில் (12) குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது 69வது பிறந்தநாளினை கொண்டாடிய ஆயர் பேரருட்தந்தை அதி வண.ஜோசப் பொன்னையா ஆண்டகைக்கு, இரா.சாணக்கியன் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். (02)



## இலங்கையை வந்தடைந்த 30,000 மெட்ரிக் தொன் உரம்



அரசுக்குச் சொந்தமான உர நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட சேதன பொட்டாசியம் குளோரைட் உரம் நேற்று (13) இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி 30,000 மெட்ரிக் தொன் சேதன பொட்டாசியம் குளோரைட் உரம், கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

## மேல் மாகாண சாரதிகளுக்கான முக்கிய அறிவிப்பு

மேல் மாகாணத்தில் நியமக் காலம் முடிவடைந்த. வாகன வருவாய் உரிமத்தை புதுப்பிக்க சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளதாக முன்னர் அறிவிக் கப்பட்டிருந்தது.

அதன்படி இந்த மாதம் 12 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை. நிறைவு பெறும் வாகனங்களுக்கான வருவாய் உரிமங்கள் எந்த கூடுதல் கட்டணமும் இல்லாமல் நவம்பர் 30 வரை செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று (13) முதல் *www.motortraffic.wp.gov.lk* என்ற இணையதளம் மூலம் மாலை 5 மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை. மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் ஒன்லைன் மூலம் வாகன வருவாய் உரிமத்தை புதுப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## நாடு கெப்டன் இல்லாத...

ஆனால், அங்கெல்லாம் பொருளாதாரம் இப்படி அழியவில்லை. விலைவாசி இப்படி நூறு மடங்கு உயரவில்லை. மக்களின் வருமானம் உடைந்து விழவில்லை.

தெற்காசியாவின் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் எப்படி எங்களுக்கு கடன் தரும் நிலையில் தங்கள் பொருளாதாரத்தை தக்க வைத்துள்ளார்கள் என்று கேட்க விரும்புகிறேன்? என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கேள்வி எழுப்பினார்.

எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது, இந்தியாவுக்கும், பங்களாதேசுக்கும் இல்லாத வரப்பிரசாதம் இந்நாட்டுக்கு இருக்கிறது. அதுதான் நாம் ஒரு தீவு. வெளியில் இருந்து கொரோனா வந்து எம்மை அழிக்க முடியாத நாடாக இது இருந்தது. நீங்கள்தான் கொரோனாவை அழைத்து வந்தீர்கள். நாட்டை திறந்து வைத்தீர்கள். இன்று இறந்து போயுள்ள பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் சாவுக்கே காரணம் நீங்கள்தான்.

இந்நிலையில் விலைவாசி உயர்வுக்கு, கொரோனாவை காரணம் காட்ட உங்களுக்கு எந்தவித யோக்கியதையும் இல்லை. உங்களுக்கு நாட்டை ஆளும் திறன் இல்லை. ஆகவே நாட்டை ஆளத்தெரிந்தவர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறுங்கள்.

இன்று இந்நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட உரத்தில் பக்டீரியா இருந்தது என்றும், நமது மண்ணுக்கு பொருத்தமற்றது என்றும் நமது நாட்டின் தேசிய தாவர ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஆனால், இந்த அறிக்கை தவறு என சீன தூதரகம் கூறுகிறது.

தங்களது உரம் தரமானது என சீனா கூறுகிறது. தங்கள் நாட்டின் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையை அவர்கள் சமர்ப்பிக்கிறார்கள். இது என்ன? இந்த விவகாரம் தொடர்பில் நமது நாட்டு தேசிய தாவர ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் பதில் கூற வேண்டும்.

இந்நாட்டில் இன்று சீனாவுக்கு துறைமுக நகரை ஒப்படைத்தது போக, அதை சுற்றியுள்ள சுமார் 13 ஏக்கர் நிலமும் இன்று சீனாவுக்கே வழங்கப்பட உள்ளதாக நாம் அறிகிறோம். அங்கேதான் இலங்கையின் அதிகாரபூர்வ ஜனாதிபதி மாளிகையும் உள்ளது. அதுதான் முன்பு பிரித்தானிய காலத்தில் வெள்ளையர்களின் ஆளுநர் மாளிகையாக இருந்தது.

ஆகவே அந்த மாளிகையையும் சீனாவுக்கு கொடுத்து விட்டு, அங்கே ஒரு சீன ஆளுநரையும் கொண்டு வந்து குடியமர்த்துங்கள். அது சீனாவின் ஆளுநர் மாளிகையாகட்டும். ஒளித்து, மறைத்து செய்யாமல், அதை பகிரங்கமாக செய்து, இந்நாட்டை சீனாவின் காலனியாக அறிவித்து விடுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## மக்களின் பிரச்சினைகள்...

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் சில பல விடயங்கள் தொடர்பிலும் இரா.சாணக்கியன் இதன்போது தெளிவுபடுத்தியிருந்தார்.

குறிப்பாக விவசாயிகளின் பசளை பிரச்சினை, காணி அபகரிப்பு, சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் மண் அகழ்வு போன்ற விடயங்களை ஜனாதிபதி, பிரதமர் போன்றோருக்கு எமது பொதுமக்கள் சார்பாக தெரியப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை இரா.சாணக்கியன் முன்வைத்திருந்தார்.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதல் மற்றும் அதகுறித்து முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளது. இந்த நிலையில் இரா.சாணக்கியனின் கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவ தா-கவும் விரைவாக தெரியப்படுத்துவதாகவும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அதி வண.ஜோசப் பொன்னையா ஆண்டகை குறிப்பிட்டிருந்தார்.

## டிசம்பர் 5 முதல் லங்கா பிரீமியர் லீக்



ஐபிஎல் தொடரைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளும் உள்ளூர் டி20 கிரிக்கெட் தொடர்களை நடத்தி வருகின்றனர். அந்த வரிசையில் இலங்கை கிரிக்கெட் வாரியமும் லங்கா பிரீமியர் லீக் டி20 தொடரை கடந்தாண்டு அறிமுகம் செய்தது.

அறிமுக சீசன் லங்கா பிரீமியர் லீக் டி20 தொடரின் இறுதிப் போட்டியில் திசரா பெரேரா தலைமையிலான ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியது.

இந்நிலையில் இத்தொடருக்கான இரண்டாவது சீசன் திகதி மற்றும் மைதானங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி லங்கா பிரீமியர் லீக் தொடரின் இரண்டாவது சீசன் வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தொடரின் முதல் போட்டியில் கலே கிளாடியேட்டர்ஸ் மற்றும் நடப்பு சாம்பியன் ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்த வுள்ளன. இப்போட்டி கொழும்பிலுள்ள பிரேமதாசா மைதானத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தொடரின் இறுதிச்சுற்றுப் போட்டிகள் அனைத்தும் ஹம்பாந்தோட்டவில் நடைபெறும் என்றும் இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## பெண்களுக்கெதிரான வன்முறையினை விழிப்பூட்டும் "இல்லத்து வழக்காடு" நூல் வெளியிடப்பட்டது




(நூருல் ஹுதா உமர்)

ஆசிய நிலையத்தின் அனுசரணையுடன் GAFSO நிறுவனத்தால் அமுல்படுத்தப்படும் பெண்களுக்கெதிரான வன்முறையினை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தின்கீழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு அங்கமாக "இல்லத்து வழக்காடு" எனும் தலைப்பில் வெளியீட்டாளரும், திட்டபணிப்பாளருமான ஏ.ஜெ.காமில் இம்டாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தக வெளியீடு காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது .

இந் நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டு வைத்தார். மேலும் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ் பாத்தீபன், கணக்காளர் ஜயசர்மிகா, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க, காரைதீவு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிட்டா உட்பட மாதர் அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



## கட்டுப்பாட்டு விலையை மீறி சீனியை விற்பனை செய்வதாக முறைப்பாடு

கட்டுப்பாட்டு விலையை மீறி சில வியாபாரிகள் சீனியை விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

வெள்ளை சீனிக்கு 125 ரூபாவாகவும் சிவப்பு சீனிக்கு 128 ரூபாவாகவும் அண்மையில் நுகர்வோர் அதிகார சபை சில்லறை விலையை நிர்ணயித்திருந்தது.

எவ்வாறாயினும் குறித்த விலையை விட அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## நோர்வே மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர்களைச் சந்தித்த அனுராதா யகம்பத்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்துக்கும், நோர்வே மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (13) திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் சேதனப் பசளையை ஊக்குவிக்கும் விடயத்தில் அனைத்து நாடுகளும் கிழக்கு மாகாணத்தை பார்த்துக் கொண்டிருப்பதாகவும், கிழக்கின் விவசாயத்தை ஊக்குவிக்கும் விடயத்தில் மிகவும் கரிசனையாக இருப்பதாகவும் நெதர்லாந்து உயரிஸ்தானிகர் குறிப்பிட்டதாக ஆளுநர் தெரிவித்தார்.

நெதர்லாந்து சிறிய நாடாக இருந்தாலும் சேதனை பசளை தயாரிக்கும் விடயத்தில் சர்வதேச மட்டத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இதன்போது நோர்வே தூதுவர் JORANLI ESKEDAL மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வணிகசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.